# மாதிரித் தேர்வு

01. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

| திட்டம் | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|
| a) பெரம்பூர் இரயில்பெட்டி தொழிற்சாலை | - 1. 1956 |
| b) நெய்வேலி லிக்னைட் கழகம் | - 2. 1977 |
| c) சேலம் உருக்காலை | - 3. 1955 |
| d) திருச்சி பாரத் கனரக மின்னனு தொழிற்சாலை | - 4. 1960 |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

02. நவீன வர்த்தகத்தின் உயிர்நாடியாக செயல்படுவது
A) வங்கிகள் B) போக்குவரத்து
C) வேளாண்மை D) விளம்பரங்கள்

03. கரும்பலகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது
A) இடைநிலைக் கல்விக்குழு B) கோத்தாரி கல்விக்குழு
C) தேசியக் கல்விக்கொள்கை D) புதிய கல்விக்கொள்கை

04. திலகரின் தளபதிகளாக (Lieutenant) கருதப்பட்டவர்கள்
A) வ.உ.சி & வ.வே.சு.அய்யர் B) வ.உ.சி & சுப்ரமணிய சிவா
C) சுப்ரமணிய சிவா & வ.வே.சு.அய்யர் D) பாரதி & வாஞ்சிநாதன்

05. சமஸ்கிருத மொழியின் சிறந்த இலக்கியக் கூடமாக திகழ்ந்தது
A) மதுரை B) தஞ்சாவூர்
C) காஞ்சிபுரம் D) உறையூர்

06. நமது கடற்படையின் கிழக்கு பிரிவு தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
A) சென்னை B) மும்பை
C) கொல்கத்தா D) விசாகப்பட்டினம்

07. இராணுவப் பொறியியல் கல்லூரி அமைந்துள்ள இடம்
A) கிர்கி B) டேராடுன்
C) வில்லிங்டன் D) நாக்பூர்

08. உலக எழுத்தறிவு நாள் கொண்டாடப்படுவது
A) செப்டம்பர் 5 B) செப்டம்பர் 8
C) ஆகஸ்டு 22 D) ஆகஸ்டு 24

09. 14 வயது முடியும் வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியைச் செயல்படுத்த வலியுறுத்தும் சட்டப்பிரிவு
A) 14வது சட்டப்பிரிவு B) 23வது சட்டப்பிரிவு
C) 39வது சட்டப்பிரிவு D) 45வது சட்டப்பிரிவு

We Shine Academy™

10. கும்மட்ட (Dome) வடிவத்தையொத்த தோற்றத்தைப் பெறுபவை
A) கேடய எரிமலைகள்
B) கரி சிட்டக்கூம்புகள்
C) பல் சிட்டக்கூம்புகள்
D) இடைமுறிவு மலைகள்

11. பசால்ட் பாறை எப்பிரிவைச் சார்ந்தது?
A) உந்துப் பாறை
B) தலையீடு பாறை
C) நீள்விரிப் பாறை
D) உருமாறிய பாறை

12. ஆப்பிக்கா மற்றும் அர்கன்சாஸ் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் வைரங்கள் ________ என்ற பாறையிலிருந்து கிடைக்கிறது?
A) நைஸ் (Gneiss)
B) மெடாமார்.ஃபிக்
C) பெரிடோட்
D) பொரிகம்

13. ஒரு நாற்கரத்தின் எல்லா கோண அளவுகளின் கூடுதல்
A) $60^0$
B) $90^0$
C) $180^0$
D) $360^0$

14. 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி வியாழக்கிழமை எனில், அதே ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் தேதி என்ன கிழமை?
A) புதன்
B) வியாழன்
C) வெள்ளி
D) சனி

15. காற்றில் ரேடியோ அலைகளின் வேகம்
A) $3x10^8$ கிமீவி$^{-1}$
B) 330 கிமீவி$^{-1}$
C) 330 மீவி$^{-1}$
D) $3x10^8$ மீவி$^{-1}$

16. செயற்கை கதிரியக்கத்தை கண்டறிந்தவர்(கள்)
A) ஆட்டோஹான், ஸ்ட்ராஸ்மான்
B) ஹென்றி பெக்கொரல்
C) கியூரி, ஜோலியட்
D) ராண்ட்ஜன்

17. செர்னோபில் (ரஷ்யா) அணுக்கரு நிலையத்தில் விபத்து நிகழ்ந்த ஆண்டு
A) 1984
B) 1986
C) 1988
D) 1989

18. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி:
i) லென்சுகளில் ஒளிவிலகலடைந்த கதிர்களின் உண்மையான குறுக்கீட்டால் கிடைக்கும் பிம்பம் மெய்ப் பிம்பம் எனப்படும்.
ii) லென்சுகளில் ஒளிவிலகலடைந்த கதிர்களின் குறுக்கீடின்றி கிடைக்கும் பிம்பம் மாய பிம்பம் எனப்படும்.
இவற்றுள்:
A) i மட்டும் சரி
B) ii மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

19. இரத்தத்தின் பாகியல் எண்
A) 0.84 η (பாய்ஸ்)
B) 0.015 η (பாய்ஸ்)
C) 0.0027 η (பாய்ஸ்)
D) 0.018 η (பாய்ஸ்)

20. சூரிய ஒளி மழைத்துளி மீது இருமுறை முழு அக எதிரொளிப்பும், இருமுறை ஒளி விலகலும் அடைவதால் தோன்றுவது
A) முதன்மை வானவில்
B) இரண்டாம் நிலை வானவில்
C) கானல் நீர்
D) ஒளியின் நிறப்பிரிகை

21. இந்தியாவிற்கு வருகை தந்த முதல் அமெரிக்க அதிபர்
A) ஜார்ஜ் புஷ்
B) ஆப்ரஹாம் லிங்கன்
C) ஜான் எ.ஃப் கென்னடி
D) ஐசன் ஹோவர்

WeShine Academy™

22. எந்த இரு முதன்மை நிறங்களைச் சேர்க்கும்போது இரண்டாம் நிலை நிறமான மெஜன்டா தோன்றுகிறது

A) சிவப்பு மற்றும் நீலம்
B) சிவப்பு மற்றும் பச்சை
C) நீலம் மற்றும் பச்சை
D) இவற்றுள் ஏதுமில்லை

23. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி:

i) எரிதல் வினைகள் யாவும் வெப்ப உமிழ் வினைகளாகும்.
ii) ஹேபர் முறையில் அமோனியா தயாரிக்கும் போது இரும்பு வினைவேக மாற்றியாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவற்றுள்:

A) i மட்டும் சரி
B) ii மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

24. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A) : கோடை காலத்தில் பால் விரைவில் தயிராக மாறிவிடுகிறது.
காரணம் (B) : உயர் வெப்பநிலைகளில் வேதிவினைகள் வேகமாக நடக்கும்.

இவற்றுள்:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமாகும்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

25. ஒருவர் $0^0$ அட்சரேகை, $0^0$ தீர்க்கரேகையில் இருக்கிறார் எனில் அவர் இருப்பது

A) பசிபிக் பெருங்கடல்
B) இந்தியப் பெருங்கடல்
C) அட்லாண்டிக் பெருங்கடல்
D) ஆர்டிக் பெருங்கடல்

26. 'காஷ்மீர் சிங்கம்' என்று அழைக்கப்படுபவர்

A) சர். சையது அகமது கான்
B) ஷேக் அப்துல்லா
C) கான் அப்துல் காபர் கான்
D) ஷேக் முஜிபூர் ரஹ்மான்

27. அண்மையில் (ஜுலை 9, 2011) புதிதாக உதயமான தெற்கு சூடான் உலகின் 193வது நாடாகும். அதன் தலைநகர்?

A) கார்த்தௌம்
B) சூபா
C) டின்கா
D) கார்ட்டூம்

28. ஃபார்டின் பாரமானி அளப்பது வளிமண்டல

A) வெப்பநிலை
B) அடர்த்தி
C) அழுத்தம்
D) ஒப்படர்த்தி

29. கீழ்க்காண்பவற்றுள் இருவிதையிலைத் தாவரம் எது?

A) மா
B) வேர்க்கடலை
C) பீன்ஸ்
D) இவை அனைத்தும்

30. கீழ்க்காண்பவற்றுள் தவறான ஒன்றைத் தேர்க

A) பூஞ்சைகள் பலசெல் உயிரிகள்.
B) பெந்தம் மற்றும் ஹுக்கரின் வகைப்பாட்டில் விதைத் தாவரங்கள் மட்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
C) புரோட்டோசோவாக்கள் திசு நிலையற்ற ஒரு செல் உயிரிகள்.
D) வளைத் தசைப் புழுக்களின் கழிவு நீக்கமும், நீர்ச்சமநிலையும் சுடர் செல்களின் மூலம் நடைபெறுகின்றன.

We Shine Academy™

31. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி:
   i) மீன்களில் இரு அறைகளையுடைய இதயம் காணப்படும்.
   ii) தவளைகள் மூன்று அறைகளையுடைய இதயத்தைக் கொண்டிருக்கும்.
   iii) புறா போன்ற பறவைகளில் நான்கு அறைகளையுடைய இதயம் காணப்படும்.
   இவற்றுள்:
   A) i மட்டும் சரி
   B) i மற்றும் iii சரி
   C) iii மட்டும் சரி
   D) அனைத்தும் சரி

32. ஆரஞ்சுப் பழத்தின் அறிவியல் பெயர்
   A) சிட்ரஸ் சைனன்ஸிஸ்
   B) அனானஸ் சட்டைவஸ்
   C) சிட்ரஸ் ஆரன்ட்டி.ஃபோலியா
   D) ஃபோனிக்ஸ் டாக்ஸி.ஃபெரா

33. தாவர மற்றும் விலங்குப் பண்புகளைப் பெற்றிருக்காத 'ஒரு செல் உயிரிகள்' இவ்வாறு அழைக்கப்படுகின்றன
   A) புரோட்டோசோவா
   B) புரோடிஸ்டா
   C) ஸ்லைம்மோல்டு
   D) பெல்லிக்கிள்

34. பெருமூளை அரைவட்டக் கோளங்களில் காணப்படும் பள்ளங்களுக்கு ________ என்று பெயர்
   A) சல்கஸ்கள்
   B) கைரஸ்கள்
   C) இன்.ஃபன்டிபுலம்
   D) வென்ட்ரிக்கிள்கள்

35. 'ராஜா பகதூர்' என்று ஆற்காடு நவாபால் பட்டம் வழங்கப்பட்டவர்
   A) விஜயரகுநாத தொண்டைமான்
   B) இராமச்சந்திர தொண்டைமான்
   C) இரகுநாத ராஜா தொண்டைமான்
   D) குட்டன் சேதுபதி

36. சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்
   A) திருஞானசம்பந்தர் திருவாசகம் என்ற பக்திப் பாடல் தொகுப்பை வெளியிட்டார்
   B) திருப்பாவை என்ற நூலை பெரியாழ்வார் இயற்றியுள்ளார்
   C) நம்மாழ்வார் திருப்பல்லாண்டு என்ற நூலை இயற்றியுள்ளார்
   D) பாண்டிய மன்னர்கள் கட்டுமானக் கோவில்களில் கவனம் செலுத்தவில்லை

37. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
   a) லூ - 1. வட இந்திய சமவெளி
   b) டைபூன்ஸ் - 2. சைனா மற்றும் ஜப்பான்
   c) எதிர் புயல்காற்று - 3. அதிக அழுத்த மையம்
   d) ஹரிக்கேன் - 4. வட அமெரிக்கா
   குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

38. 'சித்ரக்காரபுலி' என்று போற்றப்பட்டவர்
   A) முதலாம் மகேந்திரவர்மன்
   B) இராஜசிம்மன்
   C) நந்திவர்மன்
   D) முதலாம் குலோத்துங்கன்

39. தலைக்கோட்டைப் போர் நடைபெற்ற ஆண்டு
   A) கி.பி. 1556
   B) கி.பி. 1565
   C) கி.பி. 1578
   D) கி.பி. 1582

We Shine Academy™

40. தனது தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றிய நாயக்க மன்னர்
A) விஸ்வநாத நாயக்கர் B) முத்து கிருஷ்ணப்ப நாயக்கர்
C) திருமலை நாயக்கர் D) வீரபத்ர நாயக்கர்

41. ஈகா சிலிக்கன் குறிக்கும் தனிமம்
A) ஜெர்மேனியம் B) சிலிக்கன்
C) கார்பன் D) டெலூரியம்

42. யூக்ளினாவால் வெளியிடப்படும் கழிவுப் பொருள்
A) அம்மோனியா B) அமினோ அமிலம்
C) யூரிக் அமிலம் D) கொழுப்பு அமிலம்

43. சிறப்பு வாய்ந்த நீண்ட இழைப்பருத்தி விளையும் மாநிலம்
A) மகாராஷ்டிரம் B) குஜராத்
C) பஞ்சாப் D) தமிழ்நாடு

44. செப்டம்பர் முதல் மார்ச் வரை இந்தியாவில் நிலவும் பருவம்
A) வறண்ட பருவம் B) கோடை
C) மழை D) குளிர்

45. பையின் (π) மதிப்பைக் கண்டறிந்தவர்
A) புத்தயனார் B) ஸ்ரீதராச்சாரியா
C) பாஸ்கராச்சாரியா D) பிதாக்கோரஸ்

46. கூட்டுறவு அமைப்பில்
A) ‘ஒரு பங்கு ஒரு வாக்கு’ – முறை கடைபிடிக்கப்படுகிறது
B) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு
C) ‘ஒரு நபர் ஒரு வாக்கு’ – முறை கடைபிடிக்கப்படுகிறது
D) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டவை

47. ஒரு பொது நிறுமத்தில் அதிகபட்சம் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கலாம்
A) வரையறை இல்லை B) 20 C) 25 D) 50

48. பெல் (BHEL) ஒரு
A) பன்னாட்டு நிறுமம் B) அரசு நிறுமம்
C) கூட்டாண்மை நிறுமம் D) தனி நிறுமம்

49. எச்சரிக்கையான ஊக வணிகர் ________ எனப்படுவார்
A) கலைமான் B) காளை
C) முட வாத்து D) கரடி

50. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) காளை - 1. தெஜிவாலா
b) கரடி - 2. மண்டிவாலா
c) கலைமான் ஊக வணிகர் - 3. விலைகள் உயருதல்
d) காளை ஊக வணிகர் - 4. முனைம வேட்டையாளர்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

We Shine Academy™

51. 80 மாணவர்கள் உள்ள வகுப்பில் 40 மாணவர்கள் மட்டுமே வருகை தந்துள்ளார்கள் என்பதை எவ்வாறு கூறலாம்

A) 0.5 மடங்கு
B) 50 சதவீதம்
C) 0.5:1
D) இவ்வனைத்து முறைகளிலும்

52. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி:

i) பணவீக்க காலத்தில் வணிகர்களும் உற்பத்தியாளர்களும் அதிக இலாபத்தை ஈட்டுவார்கள்

ii) நிலையான வருமானம் உள்ளவர்கள் பணவீக்க காலத்தில் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள்

iii) கூலி பெறுபவர்களும், மாத ஊதியம் பெறுபவர்களும் விலை இறக்க காலத்தில் பயனடைவார்கள்

இவற்றுள்:

A) i மட்டும் சரி
B) i மற்றும் iii சரி
C) iii மட்டும் சரி
D) அனைத்தும் சரி

53. பண அளவுக்கோட்பாட்டை உருவாக்கியவர்

A) கிரௌத்தர்
B) ஆடம் ஸ்மித்
C) இர்விங் பிஷர்
D) ஆல்ஃபிரட் மார்ஷல்

54. கீழக்காண்பவற்றுள் எந்த இயக்கமுறைமை (Operating System) இயங்குவதற்கு குறைந்த அளவு நினைவகம் மட்டுமே இருந்தால் போதுமானது

A) லினக்ஸ்
B) விண்டோஸ் 98
C) விண்டோஸ் எக்ஸ்பீ
D) விண்டோஸ் 7

55. 143 என்ற எண்ணின் இரண்டடிமான மதிப்பு

A) 11001111
B) 10001111
C) 01001110
D) 00111011

56. போபாஸ், தைமாஸ் என்பவை எதன் துனைக் கோள்கள்

A) செவ்வாய்
B) வியாழன்
C) வெள்ளி
D) யுரேனஸ்

57. வல்லநாடு வெளிமான் சரணாலயம் அமைந்துள்ள தமிழக மாவட்டம்

A) நாகப்பட்டினம்
B) தூத்துக்குடி
C) திருநெல்வேலி
D) சிவகங்கை

58. சிந்திரி உரத்தொழிற்சாலை அமைந்துள்ள மாநிலம்

A) பீகார்
B) மேற்கு வங்காளம்
C) மத்திய பிரதேசம்
D) ஜார்கண்ட்

59. பாறை நகரம் என்று அழைக்கப்படுவது

A) மணிப்பூர்
B) திண்டுக்கல்
C) சண்டிகர்
D) ஜெய்பூர்

60. உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டிகளில் சிறந்த கோல் கீப்பருக்கு வழங்கப்படும் விருது

A) கோல்டன் பால்
B) கோல்டன் வாட்ச்
C) கோல்டன் பூட்
D) கோல்டன் கிளவ்

61. போரால் சுற்றுச்சூழல் பாழாவதைத் தடுக்கும் தினம்

A) நவம்பர் 6
B) நவம்பர் 9
C) நவம்பர் 19
D) நவம்பர் 24

We Shine Academy™

62. 2010ம் ஆண்டு 'டிரேன்சுபேரன்சி இன்டர்நேசனல்' வெளியிட்ட அறிக்கையின் படி ஊழல் குறைந்த நாடுகளின் வரிசையில் முதலிடத்தைப் பெறும் மூன்று நாடுகள்
A) டென்மார்க், ஐஸ்லாந்து, சிங்கப்பூர்
B) ஹாங்காங், ஜப்பான், கனடா
C) டென்மார்க், நியூசிலாந்து, சுவீடன்
D) பின்லாந்து, நியூசிலாந்து, சிலி

63. லோக் சபையில் 'ஜன் லோக்பால் மசோதா' (Jan Lokpal Bill) முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு
A) 1966
B) 1969
C) 2008
D) 2010

64. வ. உ. சிதம்பரனார் தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இடையே முதன்முதலாக கப்பல் போக்குவரத்து சேவையைத் துவக்கிய ஆண்டு
A) 1905
B) 1906
C) 1907
D) 1908

65. 9-வது 'பிரவாசி பாரதீய திவாஸ்' (வெளிநாடுவாழ் இந்தியர் தினம்) ஜனவரி 9, 2011ல் கொண்டாடப்பட்டது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நியூசிலாந்து கவர்னர்
A) ஆனந்த் சத்தியானந்த்
B) தெயின் செயின்
C) பிராங்கோ ஃபராட்டினி
D) பாலிராம் பகத்

66. 2009 ஆம் ஆண்டிற்கான ஹோமி பாபா வாழ்நாள் சாதனையாளர் விருது ஜனவரி 2011-ல் யாருக்கு வழங்கப்பட்டது
A) பரீத்தா ரெட்டி
B) மாதவன் நாயர்
C) அனில் கக்கோத்கர்
D) இராதாகிருஷ்ணன்

67. கிரிக்கெட் ரீபிளேய்டு (Cricket Replayed) என்ற புத்தகத்தை எழுதியவர்
A) அஜித் வடேக்கர்
B) கபில் தேவ்
C) விஜய் ஹசாரே
D) இம்ரான் கான்

68. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
கூற்று (A) : மலைப்பிரதேசத்தில் உணவு வேக தாமதமாகிறது.
காரணம் (B) : அழுத்தம் குறைவதால் நீரின் கொதிநிலை குறைந்துவிடுகிறது.
இவற்றுள்:
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமாகும்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

69. ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் (ODI) இரட்டை சதமடித்த முதல் வீரர் என்ற சாதனையை சச்சின் டெண்டுல்கர் எந்த அணிக்கெதிராகப் படைத்தார்?
A) ஆஸ்திரேலியா
B) இலங்கை
C) இங்கிலாந்து
D) தென் ஆப்ரிக்கா

70. யுரேனியத்தைக் கண்டுபிடித்வர்
A) மார்டின் கிளாப்ரோத்
B) என்ரிகோ ஃபெர்மி
C) எய்ந்தோவன்
D) அகதா கிறிஸ்டி

71. வட அரைக்கோளம் மற்றும் தென் அரைக்கோளத்தில் நிலம் மற்றும் பெருங்கடல் விகிதங்கள் முறையே
A) 1:1.5 மற்றும் 1:4
B) 2:1.5 மற்றும் 1:3
C) 1:2 மற்றும் 2:5
D) 2:1 மற்றும் 1:3.5

WeShine Academy™

72. மாட்டிறைச்சி மூலம் மனிதருக்குப் பரவும் நோய்
A) DPT B) BSE C) CMD D) MMA

73. சூரியனின் பெருமையைக் கூறும் புராணம்
A) பத்ம புராணம் B) பவிஷ்ய புராணம்
C) மத்ஸ்ய புராணம் D) பிரமைவர்த்த புராணம்

74. கடலில் நீந்தக் கூடிய உயிரிகளை _________ என்றழைக்கின்றனர்
A) பெந்தாஸ் B) நெக்டான்
C) பிளாங்டன் D) முருகைகள்

75. உயிரினத் தோற்றத்தின் துவக்க காலத்திலிருந்து இன்று வரை அழியாது வாழ்ந்து வரும் இயற்தொகுதியாக உள்ளவை
A) உவர்ச்சேற்று நிலம் B) சதுப்பு நிலம்
C) கழிமுகம் D) முருகைப் பாறைகள்

76. நவீன கம்யூனிசத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்
A) மார்க்ஸ் B) கிறிஸ்டாலர்
C) பிரடிரிக் D) தாமஸ்

77. ஆங்கிலேயரை வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக மாற்றிய போர்
A) பிளாசிப் போர் B) பக்சார் போர்
C) கர்நாடகப் போர் D) மைசூர் போர்

78. அற இயல் ஓர்
A) உயர்நிலை அறிவியல் B) நேர்நிலை அறிவியல்
C) தனிநிலை அறிவியல் D) மானிட இயல்

79. "வரலாறு என்பது கடந்தகால அரசியல், அரசியல் என்பது தற்போதைய வரலாறு" என்று குறிப்பிட்டவர்
A) பிரிமேன் B) ரூசோ
C) பிளாட்டோ D) மான்டெஸ்கியூ

80. நிகோலோ மாக்கியவெல்லி _________ என்னும் நூலில் முதல் முறையாக அரசு என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்
A) குடியரசு B) உலக கிராமம்
C) சமூக ஒப்பந்தம் D) இளவரசன்

81. எந்த விதியின்கீழ் அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றத்திடம் விண்ணப்பிக்க உரிமை இருக்கிறது
A) விதி 143 B) விதி 111
C) விதி 32 D) விதி 59

82. 'அரிவையம் பாகத்தான்' என்பதில் 'அரிவை' என்னும் தொடர் குறிப்பது
A) பெண்ணை B) திருமாலை
C) சிவனை D) பார்வதியை

83. தமிழில் உள்ள இருபெரும் வைணவக் காப்பியங்கள்
A) கம்பராமாயணம், வில்லிபாரதம் B) சிலப்பதிகாரம், மணிமேகலை
C) இராமாயணம், மகாபாரதம் D) சூளாமணி, நீலகேசி

We Shine Academy ™

84. _________ என்பது ஒரு தீவிர மூளைக் குறைபாடு

A) அம்னீசியா
B) அல்ஸீமியர்
C) பக்கவாதம்
D) மூளைக் காய்ச்சல்

85. தைராக்ஸின் பற்றாக்குறையினால், பெரியவர்களுக்குத் தோன்றும் நோய்

A) கிரிட்டினிஸம்
B) காய்டர்
C) மிக்ஸிடிமா
D) ஹைபோதைராய்டிஸம்

86. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்

A) மதுரை
B) சென்னை
C) கோவை
D) தஞ்சாவூர்

87. 1 வாட் மணி என்பது

A) 2400 ஜுல்
B) 3600 ஜுல்
C) 4100 ஜுல்
D) 5000 ஜுல்

88. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் (வேலூர்) துவங்கப்பட்ட ஆண்டு

A) ஜுலை 2001
B) அக்டோபர் 2002
C) செப்டம்பர் 2003
D) ஜனவரி 2004

89. நமது அரசியலமைப்பில் தீண்டாமையை ஒழிக்கும் விதி

A) விதி 15
B) விதி 16
C) விதி 17
D) விதி 18

90. இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் உள்ள பகுதி

A) பகுதி III
B) பகுதி II
C) பகுதி IV
D) பகுதி V

91. $(a+b)^2 =$

A) $a^2+2ab+b^2$
B) $a^2-2ab+b^2$
C) $a^2-b^2$
D) $a^2+b^2$

92. நிலைகாந்தங்கள் செய்யப் பயன்படுவது

A) கோபால்ட் எ∴கு
B) டங்ஸ்டன் எ∴கு
C) தேனிரும்பு
D) குரோமியம் இரும்பு

93. கீழ்க்காண்பவற்றுள் எது பூவாத்தாவரம்

A) தாலோபைட்டா
B) பிரையோ∴பைட்டா
C) டெரிடோ∴பைட்டா
D) இவை அனைத்தும்

94. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) புரோட்டோசோவா - 1. அமீபா
b) உருளைப் புழுவினம் - 2. ஆப்பிள் நத்தை
c) வளைத்தசைப் புழுக்கள் - 3. மண்புழு
d) மெல்லுடலிகள் - 4. அஸ்காரிஸ்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 1 | 4 | 3 | 2 |
| D) | 1 | 2 | 4 | 3 |

We Shine Academy™

95. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி எழுத்தறிவு அதிகம் கொண்ட இந்திய மாநிலம்

A) தமிழ்நாடு B) கேரளம்
C) ஆந்திரப் பிரதேசம் D) மத்தியப் பிரதேசம்

96. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) பவபூதி - 1. உத்திர ராமசரிதம்
b) ஜெயதேவர் - 2. கீதகோவிந்தம்
c) கிருஷ்ண மிஷ்ரர் - 3. ப்ரபோத சந்தோரதயம்
d) பர்த்துருஹரி - 4. பக்தி காவியம்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 1 | 2 | 4 | 3 |

97. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர்

A) ரவீந்திரநாத் தாகூர் B) ராஜேந்திரப் பிரசாத்
C) இந்திரா காந்தி D) அன்னை தெரசா

98. "கற்பி, ஒன்று சேர், புரட்சி செய்" என்று முழங்கியவர்

A) தயானந்த சரஸ்வதி B) பகத்சிங்
C) அம்பேத்கர் D) நேதாஜி

99. தாமிரம், துத்தநாகம் இவற்றின் கலவையே

A) பற்றாசு B) வெள்ளீயம்
C) பித்தளை D) நிக்ரோம்

100. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி

i) வெளிநாட்டில் காலமான முதல் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி
ii) மிகக் குறுகிய காலமே பிரதமராக இருந்தவர் சந்திரசேகர்
iii) துணைப்பிரதமராக இருந்து பிரதமரானவர்கள் மொரார்ஜி தேசாய், சரண்சிங்
iv) பஞ்சாயத் ராஜ் அமலாக்கப்பட்ட போது பிரதமராக இருந்தவர் நரசிம்மராவ்

இவற்றுள்:

A) i மட்டும் சரி B) i மற்றும் iii சரி
C) ii மற்றும் iv சரி D) அனைத்தும் சரி



WeShine Academy™

101. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர்
A) பாரதியார்
B) பாரதிதாசன்
C) செயங்கொண்டார்
D) பகழிக்கூத்தர்

102. 'மொர்குரிபூக்கள்' எனும் நூலின் ஆசிரியர்
A) ஜானகிராமன்
B) பாலகுமாரன்
C) நா. பார்த்தசாரதி
D) ரகுநாதன்

103. 'மலைக்கள்ளன்' எனும் நூலினை இயற்றியவர்
A) நாமக்கல் இராமலிங்கம்
B) பெருஞ்சித்திரனார்
C) வெங்கடரமணி
D) காசிம் புலவர்

104. 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் புதினத்தை எழுதியவர்
A) நாராயணத்துரை
B) வேதாச்சலம்
C) வேதநாயகம் பிள்ளை
D) ராஜம்கிருஷ்ணன்

105. 'ஆசியசோதி' எனும் நூலின் ஆசிரியர்
A) புலவர் குழந்தை
B) சுத்தானந்த பாரதியார்
C) தேசிக விநாயகம் பிள்ளை
D) சுரதா

106. பிரித்து எழுதுக: காதிலை
A) காது + இல்லை
B) காது + இலை
C) கா + இல்லை
D) காதி + இலை

107. பிரித்து எழுதுக: அந்நாடு
A) அந்த + நாடு
B) அந் + நாடு
C) அவ் + நாடு
D) அ + நாடு

108. பிரித்து எழுதுக: மட்கலத்துள்
A) மண் + கலத்துள்
B) மட் + கலத்துள்
C) மண் + கலத்து + உள்
D) ம + கலத்து + உள்

109. பிரித்து எழுதுக: முன்றில்
A) மூன்று + இல்
B) மு + இல்
C) முன் + இல்
D) மும்மை + இல்

110. பிரித்து எழுதுக: திண்டேர்
A) திண் + டேர்
B) திண்டு + ஏர்
C) தி + டேர்
D) திண்மை + தேர்

111. 'வீறு' என்னும் சொல்லின் பொருள்
A) நடை
B) மகிழ்ச்சி
C) குற்றம்
D) பெருமை

112. 'படி' என்னும் சொல்லின் பொருள்
A) அழகு
B) சுற்றம்
C) நிலம்
D) சோம்பல்

113. 'வாரணம்' என்னும் சொல்லின் பொருள்
A) புலி
B) சிங்கம்
C) எருமை
D) யானை

114. ‘எயில்’ என்னும் சொல்லின் பொருள்
A) மதில்
B) கடல்
C) மலை
D) நாடு

115. ‘பொலம்’ என்னும் சொல்லின் பொருள்
A) நெருப்பு
B) அழகு
C) தளிர்
D) உலகம்

116. எதிர்ச் சொல் தருக: மலரும்
A) தளிர்க்கும்
B) புலரும்
C) கூம்பும்
D) வீழும்

117. எதிர்ச் சொல் தருக: கேள்வி
A) வேள்வி
B) கூற்று
C) காரணம்
D) பதில்

118. எதிர்ச் சொல் தருக: பொன்மொழி
A) பழமொழி
B) தமிழ்மொழி
C) புன்மொழி
D) மெம்மொழி

119. எதிர்ச் சொல் தருக: ஏகுவீர்
A) ஓடுவீர்
B) வருவீர்
C) செல்வீர்
D) நிற்பீர்

120. எதிர்ச் சொல் தருக: உறவு
A) நட்பு
B) வசை
C) சொந்தம்
D) பகை

121. “க” என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக
A) ஒன்று
B) இரண்டு
C) மூன்று
D) நான்கு

122. “சி” என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக
A) சாதல்
B) தலைவன்
C) சிவம்
D) இறகு

123. “தே” என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக
A) அரண்
B) நஞ்சு
C) தெய்வம்
D) பகை

124. “நூ” என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக
A) சிறுமி
B) திருமகள்
C) பொருந்து
D) அணிகலன்

125. “மீ” என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிக
A) மலர்
B) மேலிடம்
C) காற்று
D) அன்பு

126. திராவிட வேதம் என்பது
A) தேவாரம்
B) திருக்குறள்
C) திருமந்திரம்
D) திருவாய்மொழி

We Shine Academy™

127. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க
A) மலர்க்கண்கள் மகிழ்ச்சி கண்ணீர் சொரிந்தன
B) மலர்க்கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தன
C) மலர்க்கண்கள் மகிழ்ச்சி கண்ணீர்ச் சொரிந்தன
D) மலர்க்கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீர்ச் சொரிந்தன

128. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க
A) முரட்டுக் காளையை பிடித்து அடக்கினான்
B) முரட்டுக் காளையைக் பிடித்து அடக்கினான்
C) முரட்டுக் காளையைப் பிடித்து அடக்கினான்
D) முரட்டு காளையை பிடித்து அடக்கினான்

129. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க
A) கல்வி துறைக்கு புதிய பெயர்
B) கல்வித் துறைக்கு புதிய பெயர்
C) கல்வித் துறைக்குப் புதிய பெயர்
D) கல்வித் துறைக்குப் புதியப் பெயர்

130. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க
A) தண்டுக் கீரையைப் பறித்துச் சென்றாள்
B) தண்டு கீரையைப் பறித்துச் சென்றாள்
C) தண்டுக் கீரையை பறித்துச் சென்றாள்
D) தண்டுக் கீரையைப் பறித்து சென்றாள்

131. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
"பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும்"
A) கனக சுப்புரத்தினம் யார்?
B) பாரதிதாசன் எத்தகைய கவிஞர்?
C) பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
D) பாரதிதாசனை மக்கள் எவ்வாறு அழைத்தனர்?

132. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
"செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. ஆவார்"
A) வ.உ.சி செக்கிழுத்தாரா?
B) வ.உ.சி செக்கிழுத்த செம்மலா?
C) செக்கிழுத்த செம்மல் யார்?
D) வ.உ.சி எங்கே செக்கிழுத்தார்?

133. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
"தீண்டாமை ஒழிய வேண்டுமெனில் சாதியை ஒழிக்க வேண்டும்"
A) தீண்டாமை ஒழிய எதை ஒழிக்க வேண்டும்?
B) தீண்டாமை என்றால் என்ன?
C) சாதியால் எதை ஒழிக்கலாம்?
D) சாதியை ஒழிக்க என்ன செய்ய வேண்டும்?

134. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
"சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்"
A) சிலப்பதிகாரத்தை இயற்றியது யார்?
B) சிலப்பதிகாரம் என்றால் என்ன?
C) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
D) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினாரா?

We Shine Academy™

135. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க
“நாளை கல்லூரி திறக்கப்படும்”
A) என்று கல்லூரி திறக்கப்படும்
B) நாளை கல்லூரி திறக்கப்படுமா?
C) ஏன் கல்லூரி திறக்கப்படும்?
D) கல்லூரி எங்கு உள்ளது?

136. “கவிச் சக்கரவர்த்தி” எனும் தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
A) சேக்கிழார்
B) திருவள்ளுவர்
C) கம்பர்
D) கண்ணதாசன்

137. “மாதானுபங்கி” எனும் தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
A) பாரதியார்
B) திருவள்ளுவர்
C) சுரதா
D) ஒட்டக்கூத்தர்

138. “கவியரசு” என்று போற்றப்படுபவர்
A) வைரமுத்து
B) ஜெயகாந்தன்
C) கண்ணதாசன்
D) தொல்காப்பியர்

139. “தண்டமிழ் ஆசான்” என்று போற்றப்படுபவர்
A) கம்பதாசன்
B) திருஞானசம்பந்தர்
C) நாதகுத்தனார்
D) சீத்தலைச் சாத்தனார்

140. “பாட்டுக்கொரு புலவன்” இத்தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
A) கவிமணி
B) பாரதியார்
C) இராமலிங்கம் பிள்ளை
D) திரு.வி.க

141. வேர்ச்சொல்லைக் காண்க: பருகுவான்
A) பருகிய
B) பருகியவன்
C) பருகுவ
D) பருகு

142. வேர்ச்சொல்லைக் காண்க: அகழ்ந்தார்
A) அகழ்ந்து
B) அகழ்ந்தான்
C) அகழ்
D) அகழ்ந்தவன்

143. வேர்ச்சொல்லைக் காண்க: கண்டோம்
A) காண்
B) கண்ட
C) கண்
D) கண்டு

144. வேர்ச்சொல்லைக் காண்க: விரும்பினான்
A) விரும்பி
B) விரு
C) விரும்பிய
D) விரும்பு

145. வேர்ச்சொல்லைக் காண்க: சென்றான்
A) செல்க
B) செலுத்து
C) சென்று
D) செல்

146. பெயர்ச்சொல்லின் வகையறிக: பெட்டி
A) சினைப்பெயர்
B) பண்புப்பெயர்
C) பொருட்பெயர்
D) காலப்பெயர்

We Shine Academy™

147. பெயர்ச்சொல்லின் வகையறிக: செவ்வகம்

A) சினைப்பெயர்
B) பண்புப்பெயர்
C) பொருட்பெயர்
D) காலப்பெயர்

148. பெயர்ச்சொல்லின் வகையறிக: எழுதுதல்

A) தொழிற்பெயர்
B) சினைப்பெயர்
C) பொருட்பெயர்
D) காலப்பெயர்

149. பெயர்ச்சொல்லின் வகையறிக: மலை

A) காரணப்பெயர்
B) தன்மைப்பெயர்
C) முன்னிலைப்பெயர்
D) இடுகுறிப்பெயர்

150. பெயர்ச்சொல்லின் வகையறிக: உலகம் மகிழ்ந்தது

A) பண்பாகு பெயர்
B) சினையாகு பெயர்
C) இடவாகு பெயர்
D) பொருளாகு பெயர்

151. அகரவரிசைப்படி எழுதுக

A) எடை, எகினம், எண்ணம், எ∴கு
B) எ∴கு, எகினம், எடை, எண்ணம்
C) எ∴கு, எடை, எண்ணம், எகினம்
D) எகினம், எ∴கு, எடை, எண்ணம்

152. அகரவரிசைப்படி எழுதுக

A) காற்றாடி, கூத்தாடி, பண்டம், பணிவு
B) பணிவு, காற்றாடி, கூத்தாடி, பண்டம்
C) பண்டம், பணிவு, காற்றாடி, கூத்தாடி
D) காற்றாடி, கூத்தாடி, பணிவு, பண்டம்

153. அகரவரிசைப்படி எழுதுக

A) அன்பு, இன்பம், உவகை, ஏற்றம்
B) இன்பம், அன்பு, ஏற்றம், உவகை
C) ஏற்றம், உவகை, இன்பம், அன்பு
D) உவகை, இன்பம், அன்பு, ஏற்றம்

154. அகரவரிசைப்படி எழுதுக

A) எழுதினேன், இசை, அரசியல், ஈன்றனள்
B) அரசியல், இசை, ஈன்றனள், எழுதினேன்
C) அரசியல், இசை, எழுதினேன், ஈன்றனள்
D) இசை, எழுதினேன், அரசியல், ஈன்றனள்

155. அகரவரிசைப்படி எழுதுக

A) திருவாசகம், தேவாரம், இறைவன், கடவுள்
B) கடவுள், இறைவன், தேவாரம், திருவாசகம்
C) இறைவன், கடவுள், திருவாசகம், தேவாரம்
D) தேவாரம், இறைவன், கடவுள், திருவாசகம்

156. 'நேற்று மழை பெய்தது' – வாக்கியத்தின் வகையறிக

A) உணர்ச்சி வாக்கியம்
B) கட்டளை வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம்
D) செய்தி வாக்கியம்

We Shine Academy™

157. வாக்கியத்தின் வகையறிக: ‘கடையில் குடை வாங்கி வா’

A) உடன்பாட்டு வாக்கியம்
B) வினா வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம்
D) கட்டளை வாக்கியம்

158. ‘என்னே! பரிமேலழகன் பாரித்த உரையின் மாண்பு’ – வாக்கியத்தின் வகையறிக

A) உணர்ச்சி வாக்கியம்
B) கட்டளை வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம்
D) செய்தி வாக்கியம்

159. ‘காந்தியடிகள் பொய் பேசார்’ - எவ்வகை வாக்கியம்

A) செய்வினை வாக்கியம்
B) பிறவினை வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம்
D) தன்வினை வாக்கியம்

160. செயப்பாட்டு வினை வாக்கியம் எது என அறிக

A) ஆசிரியர் என்னைப் பாராட்டினார்
B) என்னை ஆசிரியர் பாராட்டினார்
C) நான் ஆசிரியரால் பாராட்டப்பட்டேன்
D) ஆசிரியர் பாராட்டினார்

161. இலக்கணக் குறிப்பு எழுதுக: “கடிமலர்”

A) வினைத்தொகை
B) உவமைத்தொகை
C) வினையாலணையும் பெயர்
D) உரிச்சொல் தொடர்

162. பண்புத்தொகையைக் கண்டறிக

A) வேட்கை
B) பூங்கொடி
C) முதுகுடி
D) கேண்மை

163. இலக்கணக் குறிப்பு தருக: “வாயில்”

A) மரூஉ மொழி
B) விகாரம்
C) ஒருபொருட் பன்மொழி
D) இலக்கணப் போலி

164. இலக்கணக் குறிப்பு எழுதுக: “காய்சினம்”

A) வினைத்தொகை
B) உவமைத்தொகை
C) வினையாலணையும் பெயர்
D) உரிச்சொல் தொடர்

165. “வாழ்தல்” என்பதன் இலக்கணக் குறிப்பு

A) வினைமுற்று
B) பெயரெச்சம்
C) எண்ணும்மை
D) தொழிற்பெயர்

166. ‘உண்’ எனும் வேர்ச்சொல்லை வினைமுற்றாக்குக

A) உண்டு
B) உண்ணு
C) உண்டான்
D) உண்டல்

167. ‘அள’ எனும் வேர்ச்சொல்லின் வினையெச்சம் அறிக

A) அளந்து
B) அளந்த
C) அளந்தாள்
D) அளந்தவன்

168. ‘நடி’ என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் காண்க

A) நடிக்க
B) நடிப்பர்
C) நடித்தல்
D) நடிக்கும்

We Shine Academy™

169. 'தின்' என்பதன் வினையாலணையும் பெயரைக் கண்டறிக

A) தின்னு B) தின்னுதல்

C) தின்ற D) தின்பவன்

170. 'தேர்' என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் குறிப்பிடுக

A) தேர்க B) தேற்றுக

C) தேர்தல் D) தேரு

171. பொருளறிந்து பொருத்துக:

a) கரி - 1. போர்

b) செரு - 2. யானை

c) சிலை - 3. சிரிப்பு

d) நகை - 4. வில்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 |

172. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) ஆசிய ஜோதி - 1. அறிஞர் அண்ணா

b) செவ்வாழை - 2. தேசிகவிநாயகம் பிள்ளை

c) கரித்துண்டு - 3. நா. பார்த்தசாரதி

d) குறிஞ்சி மலர் - 4. மு. வரதராசனார்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 2 | 4 | 1 |

173. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

a) சிலப்பதிகாரம் - 1. சேக்கிழார்

b) திருக்குறள் - 2. கம்பர்

c) இராமாயணம் - 3. திருவள்ளுவர்

d) பெரியபுராணம் - 4. இளங்கோவடிகள்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 2 | 4 | 1 |

174. 'வேதம் தமிழ் செய்த மாறன்' எனப் போற்றப்படுபவர்

A) திருமங்கையாழ்வார் B) குமரகுருபரர்

C) தாயுமானவர் D) நம்மாழ்வார்

175. நீதிநூல் என்னும் அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்

A) திருக்குறள் B) பழமொழி

C) திரிகடுகம் D) உலா

176. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) அர்ச்சுனன் B) தருமன்
C) இராமன் D) சகாதேவன்

177. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) குதிரைப்படை B) யானைப்படை
C) ஒட்டகப்படை D) தேர்ப்படை

178. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) பரி B) நரி
C) கரி D) தறி

179. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) ஆண்பால் B) பசும்பால்
C) பெண்பால் D) பலர்பால்

180. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) மார்கழி B) யாமம்
C) வைகறை D) ஏற்பாடு

181. ஒருமை, பன்மை பிழைகள் நீங்கிய தொடரைத் தேர்க
A) மாணவர்கள் படித்தனர் B) மாணவர்கள் படித்தது
C) மாணவன் படித்தனர் D) மாணவன் படித்தது

182. ஒருமை, பன்மை பிழைகள் நீங்கிய தொடரைத் தேர்க
A) அது வந்தது B) அது வந்தன
C) அது வந்தனர் D) அது வந்தவை

183. பிழையற்ற தொடரைத் தேர்க
A) தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றனர்
B) தமிழ்நாட்டு அணிகள் போட்டியில் வென்றனர்
C) தமிழ்நாட்டு அணிகள் போட்டியில் வென்றது
D) தமிழ்நாட்டு அணியினர் போட்டியில் வென்றனர்

184. பிறமொழி சொற்கள் நீங்கிய தொடரைத் தேர்க
A) புஷ்பம் சூடி வா B) புட்பம் சூடி வா
C) மலர் சூடி வா D) புஷ்பம் அணிந்து வா

185. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைக் கூறுக:
“கார் மேகத்தைக் கண்ட மயில் போல”
A) பாசம் B) நாசம்
C) மகிழ்ச்சி D) துயரம்

186. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்க:
“கொழு கொம்பற்ற கொடி போல”
A) ஆதரவு B) தாவுதல்
C) ஆதரவின்மை D) அசைதல்

187. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தழிழ்ச்சொல்லைத் தேர்க: வெரிபிகேஷன்
A) சோதனையிடல் B) முறைபார்த்தல்
C) திருத்துதல் D) சரிபார்த்தல்

188. ஒலிவேறுபாடறிந்து பொருத்துக:

| | ஆல் | ஆள் | ஆழ் |
|---|---|---|---|
| A) | மரம் | மூழ்கு | மனிதன் |
| B) | மனிதன் | மரம் | அழகு |
| C) | மரம் | மனிதன் | மூழ்கு |
| D) | மூழ்கு | மனிதன் | மரம் |

189. ஒலிவேறுபாடறிந்து பொருத்துக:

| | கலி | களி | கழி |
|---|---|---|---|
| A) | வறுமை | அவலம் | போக்குதல் |
| B) | சிறுமை | களிப்பு | நீக்குதல் |
| C) | சிறுமை | மகிழ்ச்சி | போக்கு |
| D) | வறுமை | மகிழ்ச்சி | நீக்குதல் |

190. மரபுப் பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக

A) காட்டில் களிறு கத்தியது
B) காட்டில் களிறு அலரியது
C) காட்டில் களிறு பிளிறியது
D) காட்டில் களிறு உறுமியது

191. மரபுப் பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக

A) பசு குட்டி போட்டது
B) பசு குட்டி ஈன்றது
C) பசு கன்று போட்டது
D) பசு கன்று ஈன்றது

192. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் காண்க: Hanging

A) தூக்கில் இடுவது
B) சுட்டுக் கொல்வது
C) சிறையில் இடுவது
D) சித்திரவதை செய்வது

193. ‘வெந்த புண்ணில் வேல் பாய்தல்’ எனும் உவமையால் விளக்கப்பெறும் பொருள்

A) துன்பம்
B) பெருந்துன்பம்
C) வறுமை
D) கேடு

194. அடியெதுகையைக் கண்டறிக

“இல்லாமை வறுமையவர்க்(கு) இயலாமை தீச் செயலே
சொல்லாமை பொய்குறளை சோராமை பிறர் பயனே”

A) இல்லாமை - இயலாமை
B) சொல்லாமை - தீச்செயல்
C) இல்லாமை - சொல்லாமை
D) வறுமை - பொய்குறள்

195. மாஸ்க் (Mosque) - இணையான தமிழ்ச் சொல்லை எடுத்தெழுதுக

A) கோயில்
B) ஆலயம்
C) தேவாலயம்
D) பள்ளிவாசல்

196. வழுஉச் சொற்கள் நீங்கிய தொடரைத் தேர்க

A) குளம் ரொம்ப வத்திப் போச்சு
B) குளம் நிரம்ப வற்றிப் போச்சு
C) குளம் ரொம்ப வற்றிப் போயிற்று
D) குளம் நிரம்ப வற்றிப் போயிற்று

197. வழுஉச் சொல் திருத்தம் பெற்ற சொல்லைத் தேர்ந்தெடு

A) கயிறு
B) சீயக்காய்
C) தலகாணி
D) வவுறு

We Shine Academy TM

198. மோனையமைந்த சொற்களைத் தேர்க
“அச்சமும் நாணமும் அறிவிலார்க்கு இல்லை”
A) அச்சமும் - இல்லை
B) அறிவிலார்க்கு - நாணமும்
C) அச்சமும் - அறிவிலார்க்கு
D) நாணமும் - இல்லை

199. சொற்களை மாற்றிச் சரியான சொற்றொடரை அமைக்க
“நோக்கினான் அண்ணலும் நோக்கினாள் அவளும்”
A) நோக்கினாள் அவளும் நோக்கினான் அண்ணலும்
B) அவளும் அண்ணலும் நோக்கினாள் நோக்கினான்
C) அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்
D) நோக்கினான் அவளும் அண்ணலும் நோக்கினாள்

200. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) தூக்கு - 1. பழமை
b) நல்கும் - 2. பக்கம்
c) மருங்கு - 3. தரும்
d) தொன்மை - 4. செய்யுள் ஓசை

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 3 | 2 | 4 | 1 |

*****

“முயற்சி திருவினையாக்கும்!”

We Shine Academy ™

MODEL TEST

# Keys for General Knowledge (GK) and General Tamil (GT)

| General Knowledge (GK) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 001 | C | 026 | B | 051 | D | 076 | A |
| 002 | A | 027 | B | 052 | D | 077 | B |
| 003 | C | 028 | C | 053 | C | 078 | A |
| 004 | B | 029 | D | 054 | A | 079 | A |
| 005 | C | 030 | D | 055 | B | 080 | D |
| 006 | D | 031 | D | 056 | A | 081 | C |
| 007 | A | 032 | A | 057 | B | 082 | D |
| 008 | B | 033 | B | 058 | D | 083 | A |
| 009 | D | 034 | D | 059 | C | 084 | B |
| 010 | A | 035 | A | 060 | D | 085 | C |
| 011 | A | 036 | C | 061 | A | 086 | D |
| 012 | C | 037 | C | 062 | C | 087 | B |
| 013 | D | 038 | A | 063 | B | 088 | B |
| 014 | C | 039 | B | 064 | B | 089 | C |
| 015 | D | 040 | C | 065 | A | 090 | A |
| 016 | C | 041 | A | 066 | C | 091 | A |
| 017 | B | 042 | A | 067 | C | 092 | A |
| 018 | C | 043 | C | 068 | A | 093 | D |
| 019 | C | 044 | D | 069 | D | 094 | C |
| 020 | B | 045 | A | 070 | A | 095 | B |
| 021 | D | 046 | C | 071 | A | 096 | A |
| 022 | A | 047 | A | 072 | B | 097 | A |
| 023 | C | 048 | B | 073 | D | 098 | C |
| 024 | A | 049 | A | 074 | C | 099 | C |
| 025 | C | 050 | D | 075 | D | 100 | D |

| General Tamil (GT) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 101 | C | 126 | D | 151 | B | 176 | C |
| 102 | B | 127 | C | 152 | D | 177 | C |
| 103 | A | 128 | C | 153 | A | 178 | D |
| 104 | C | 129 | C | 154 | B | 179 | B |
| 105 | C | 130 | A | 155 | C | 180 | A |
| 106 | B | 131 | C | 156 | D | 181 | A |
| 107 | D | 132 | C | 157 | D | 182 | A |
| 108 | C | 133 | A | 158 | A | 183 | D |
| 109 | C | 134 | C | 159 | C | 184 | C |
| 110 | D | 135 | A | 160 | C | 185 | C |
| 111 | D | 136 | C | 161 | D | 186 | C |
| 112 | C | 137 | B | 162 | C | 187 | D |
| 113 | D | 138 | C | 163 | D | 188 | C |
| 114 | A | 139 | D | 164 | A | 189 | D |
| 115 | B | 140 | B | 165 | D | 190 | C |
| 116 | C | 141 | D | 166 | C | 191 | D |
| 117 | D | 142 | C | 167 | A | 192 | A |
| 118 | C | 143 | A | 168 | C | 193 | B |
| 119 | B | 144 | D | 169 | D | 194 | C |
| 120 | D | 145 | D | 170 | C | 195 | D |
| 121 | A | 146 | C | 171 | B | 196 | D |
| 122 | C | 147 | B | 172 | B | 197 | A |
| 123 | C | 148 | A | 173 | C | 198 | C |
| 124 | D | 149 | D | 174 | D | 199 | C |
| 125 | B | 150 | C | 175 | A | 200 | B |

We Shine Academy™